1968 ஆகஸ்ட் 20]

திரு. கே. விஞயகம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், ஹாண்டே அவர்கள் கேட்ட கேள்வி ஆஸ்பத்திரியில் இடம் பற்ருக் குறையாக இருப்பதால் தற்போது ஜெயில் இருக்கும் இடத்தையும் ஆஸ்பத்திரிக்காக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் இருக்கிறதா என்பது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் : உங்களுக்கு எப்படி கேள்வி கேட்க உரிமை இருக்கிறதோ அதே போன்று அமைச்சர்களுக்கு விடை அளிக்காமல் இருக்கவும் உரிமை இருக்கிறது. ஆகவே, இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லே.

பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்களிலுள்ள சிப்பந்திகள்

* 60 விஞ—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் மருத்துவ மனேகளில் வேலே செய்யும் எம்.என்.ஓ. போன்ற சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் போன்ற எல்லா வசதிகளேயும் பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனேகளிலுள்ள எம்.என்.ஓ. போன்ற சிப்பந்திகளுக்கு நீட்டிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனேயிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லே.

திரு. சி. கோவிந்தராசன் : அரசினர் மருத்துவ மனேயில் உள்ள எம்.என்.ஓ. போன்றவர்களும், பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியில் உள்ள எம்.என்.ஓ. போன்றவர்களும் ஒரே மாதிரி வேலேயைச் செய்கிருர்கள். ஒரே மாதிரி வேலேகளேச் செய்து ஒரே மாதிரி தகுதிகளேப் பெற்றிருக்கிற அவர்கள் வேறு இலாகாவிலே பணி புரிகிற காரணத்தால் பென்ஷன் போன்ற சில சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்காமல் இருப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து அவர்களுக்கும் அந்தச் சலுகைகளேக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பஞ்சாயத்து யூனியனில் பணி புரிகின்ற ஊழியர்களில் ஆசிரியர்களேத் தவிர வேறு யாருக்கும் பென்ஷனரி பெனிபிட்ஸ் கிடையாது. அவர்களே ஒரேவிதமாக நடத்துவது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

Non-Tamil I.A.S. Officers

* 41 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the cash award scheme formulated for non-Tamil Indian Administrative Officers serving in this State?

THE HON. THIRU C. N. ANNADURAI : At the instance of the Government of India, the State Government are giving a cash award of Rs. 1,000 for the I.A.S. Officers borne on the Madras

Cadre, whose mother tongue is not Tamil, who have not studied Tamil either in the High School or in the College and who have not completed six years of service.

திரு. மா. பா. சாரதி : அப்படி தமிழர்கள் அல்லாத ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நம் மாநிலத்தில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அது குறித்த விவரம் என்னிடமில்லை. ஆனால் தமிழ் அறியாத அதிகாரிகள் இங்கு வந்து பணியாற்றுவதுபோல் இங்குள்ளவர்கள் அவர்களுடைய தாய்மொழி அல்லாத இடங்களில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அதுபற்றிய முழு விவரமும் தேவை என்றால் தனிக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: இந்த ரொக்கப் பரிசுப் பணத்தை இந்திய சர்க்காரின் சிபார்சின்பேரில் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பணத்தில் இந்திய அரசு ஏதாவது பங்கு பெறுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இவ்வளவு சிறிய தொகைக்கு அவ்வளவு பெரிய அரசிலிருந்து நாங்கள் பங்கு எதுவும் கோரவில்லை.

திரு. நா. காசிராமன்: இந்தத் தொகை எந்த வருடத்திலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதற்கான உத்தரவு 1967, நவம்பர் மாதத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது முதற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, with a view to enable these non-Tamil Indian Administrative Officers to get qualifed in the Tamil language, what is the *modus operandi* that is being adopted to get them qualified? Are they made to attend any classes conducted by the Government or do they themselves study and get qualified ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, a draft syllabus has been prescribed for them which corresponds to the S.S.L.C. standard. The syllabus has been very carefully drafted by the Madras Public Service Commission and examinations are held. They get private training and write the examination.

திரு. வி. கே. கோதண்டராமன்: தமிழர் அல்லாதவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி கொடுப்பதைப் போலவே தமிழர்கள் இந்தி படிப்பதற்காக வேண்டி அது போன்ற ஆயிரம் ரூபாய் வெகுமதி அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: நாம் எடுத்துக் கொண்டிருக்கிற இந்த நல்ல யோசனை மற்றயிடத்திலும் நல்ல கருத்தைப் பரப்பும் என்று எதிர்பார்க்கிறேன்.

1968 ஆகஸ்ட் 20]

திரு. க. இராமமூர்த்தி : இதுவரை இந்த ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற அதிகாரிகள் எவ்வளவு பேர்கள்? அதிகம் பேர்கள் பெற்றிருந்தாலும் அல்லது பெருமலிருந்தாலும் இப்படி பரிசு தருவதை ஒரு நிகழ்ச்சியாக நடத்தினல் மேலும் அதிகாரிகள் இதில் ஊக்கம் கொண்டு விரைவாக முன்னேற வசதியளிக்கும் அல்லவா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : நல்ல யோசனை, கவனிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, cash awards are given to non-Tamil Indian Administrative Officers. Is that facility given to other Subordinate Indian Officers also?

THE HON. THIRU C. N. ANNADURAI : At present only I.A.S. and I.P.S. officers are covered by this scheme.

வட்ட அலுவலக எழுத்தர்களுக்கு வீட்டு வாடகைப் படி

*42 **வின.—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப் பாரா—

கோவை மாவட்டத்தில் திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய இம்மூன்று தாலுக்கா அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர் களுக்கு வீட்டு அலவன்ஸாக ரூ. 5-ம் ரூ. 7-ம் கொடுக்கப் படுவதைப் போல் மற்ற தாலுக்கா அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர்களுக்கு ஏன் கொடுக்கப்படுவதில்லை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : வீட்டு வாடகைப் படி வழங்குவதற்காக, முக்கியமாய் மக்கள் தொகை அடிப்படை யிலும் அந்தந்தப் பகுதிகளில் வீட்டு வசதிப் பற்றுக்குறை நிலையையும் பொறுத்து, ஊர்கள் வகைப்படுத்தப்படுகின்றன. 50,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் ரூ. 300-ம், அதற்குச் குறைந்தும் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு அவர்களின் சம்பள அடிப்படையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 5, 7, 9, 12 என்று வீட்டு வாடகைப் படி அளிக்கப் படுகிறது. வீட்டு வாடகைப் படி விதங்கள் வரையறுக்கப் பட்டபோது, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பிற வட்டத் தலைமையிடங்களில் மக்கட் தொகை 50,000-க்கும் குறைவாகவே இருந்தது; எனவே இந்த இடங்களில் பணியாற்றும் ஊழியர் களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 3 என்கிற ஒரு படிதான் குறைந்த விதத்திலேயே வீட்டு வாடகைப் படி அளிக்கப் படுகிறது.

திரு. என். மருதாசலம் : கோவை, ஈரோடு, திருப்பூர் போன்ற யிடங்களில் உள்ள தாலுகா ஆபீஸ்களில் பணிபுரியும் எழுத்தர் களுக்கு ரூ. 5, 7 வாடகைப் படி கொடுக்கிறுர்கள். ஆனல் மற்ற இடங்களிலுள்ள தாலூகா ஆபீஸ் எழுத்தாளர்களுக்கு கொடுப் பதில்லை, காரணம், ஜனத்தொகை அடிப்படையில் கொடுப் பதாகச் சொன்னுர்கள். பொள்ளாச்சியில் அதிகப்படி ஜனத் தொகை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு ஏன் கொடுப் பதில்லை ?